பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**22 04 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

**2.** வாக்காளர்கள் சொந்த ஊர்களுக்குச் சென்று வாக்களிக்க வசதியாக, சென்னையில் இருந்து சிறப்பு பேருந்துகளும், ரயில்களும் இயக்கப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**3.** உலக அளவில் மாறி வரும் சூழலுக்கு ஏற்ப பாதுகாப்பு துறையில் புதிய அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

**4.** பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

**5.** ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி **47** ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் உள்ள 234 தொகுதிகளிலும் ஒரேகட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்த தொகுதிகளில் நேற்று மாலையுடன் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் முடிவுக்கு வந்துள்ளது.

திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தமது கொளத்தூர் தொகுதியிலும், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியிலும், தவெக தலைவர் திரு. விஜய் சென்னையிலும் இறுதிக்கட்டப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இதேபோல் மாநிலம் முழுவதும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள், நாம் தமிழர் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் கடைசிகட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டு வாக்கு சேகரித்தனர்.

இதனிடையே நாளை வாக்குப்பதிவை முன்னிட்டு, தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்துகொள்ளக்கூடிய VVPAT கருவிகள் வைக்கப்பட்டுள்ள மையங்களில் இருந்து, அந்தந்த தொகுதிகளில் அடங்கிய வாக்குச்சாவடிகளுக்கு கொண்டு செல்லும் பணிகள் தொடங்கியுள்ளன.

மேலும் வாக்குப்பதிவுக்கு தேவையான அழியாத மை, எழுதுபொருட்கள் உள்ளிட்டவையும் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

நெல்லை மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப்பதிவு எந்திரங்கள் உள்ளிட்டவற்றை கொண்டு செல்லும் பணிகள் தொடங்கியிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநிலத்தில் உள்ள 234 தொகுதிகளில் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மாநிலம் முழுவதும் சுமார் 75 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள சுமார் 6 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் கூடுதல்

பாதுகாப்பு போடப்படும் என்று காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

5 கோடியே 73 லட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாக்குப்பதிவு காலை 7 மணி முதல், மாலை 6 மணிவரை நடைபெறும்.

மாநிலம் முழுவதும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் காவல் துறையினருடன் 300 கம்பெனி துணை ராணுவப் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள், அச்சமின்றி மக்கள் வாக்களிப்பதை உறுதி செய்வதற்காக தீவிர ரோந்துப் பணியில் ஈடுபடுவார்கள்.

சென்னையில் 24 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக மாநிலம் முழுவதும் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நுண் பார்வையாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்காளர்கள் சொந்த ஊர்களுக்கு சென்று வாக்களிக்க வசதியாக மாநில அரசின் சார்பில் நேற்று முதல் நாளை வரை, சென்னையில் இருந்து மொத்தம் 11 ஆயிரத்து 323 பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக போக்குவரத்து துறை முதன்மைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் தெற்கு ரயில்வே மூலம் சென்னையில் இருந்து பிற ஊர்களுக்கும், அங்கிருந்து சென்னைக்கும் வரும் 28ஆம் தேதி வரை சிறப்பு ரயில்களும் இயக்கப்படுகின்றன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுடன் மேற்குவங்க மாநிலத்தில் முதற்கட்டமாக 152 தொகுதிகளிலும் நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்கத்தில் இரண்டாவது மற்றும் இறுதிகட்டமாக வரும் 29ஆம் தேதி 142 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகளும், ஏற்கனவே தேர்தல் நிறைவடைந்த கேரளம், அசாம், புதுச்சேரியில் பதிவான வாக்குகளும் அடுத்த மாதம் 4ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகும்.

<<<<>>>>

வாக்காளர்கள் பல்வேறு தகவல்களை அறியவும், புகார்களை தெரிவிக்கவும் தேர்தல் ஆணையம் மொபைல் செயலிகளை உருவாக்கியுள்ளது.

இதுதொடர்பாக எமது செய்தியாளரிடம் பேசிய சேலம் மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. அருண் தம்புராஜ், மாற்றுத்திறனாளிகள் சக்கர நாற்காலிகளை முன்பதிவு செய்துகொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

(Voice Byte — Arun Thamburaj — 52 Sec)

<<<<>>>>

உலக அளவில் மாறி வரும் சூழலுக்கு ஏற்ப பாதுகாப்பு துறையில் புதிய அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

மூன்று நாள் பயணமாக ஜெர்மனி சென்றுள்ள அவர், அந்நாட்டு பாதுகாப்புத்துறை தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுக் கூட்டத்தில் உரையாற்றினார்.

தற்போது உலக நாடுகள் புதிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதாகவும், அதிநவீன தொழில்நுட்ப மாற்றங்கள்

இந்த நிலைமையை மிகவும் ஒருங்கிணைத்து செயலாற்ற வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இத்தகைய சூழலுக்கு ஏற்றவாறு விருப்பங்களுடன் கூடிய புதிய அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டிய தருணம் உருவாகியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சுயசார்பு இந்தியா என்பது வெறும் கொள்முதல் திட்டம் மட்டுமல்ல இணைந்து உருவாக்குதல், வடிவமைத்தல், புதிய கண்டுபிடிப்புகளை ஏற்றுக்கொண்டு பாதுகாப்பு தளவாடங்களை ஏற்றுக்கொள்ளுதல் என்பதாகும் என்று அவர் தெரிவித்தார்.

ஜெர்மனியுடன் இணைந்து இருதரப்புக்கும் பயனளிக்க கூடிய வகையிலான தொழில்நுட்ப பங்களிப்பை அதிகரித்திருப்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

ஜம்மு-கஷ்மீரின் பஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் கடந்த ஆண்டு இதே நாளில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் உட்பட **26** பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

பஹல்காம் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இந்திய ராணுவம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மனிதாபிமான எல்லைகளை தீவிரவாதிகள் மீறும்போது, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து கடந்த ஆண்டு மே மாதம் 6 மற்றும் 7ஆம் தேதிகளில் இந்திய ராணுவத்தினர் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடங்கினர்.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்கள் மற்றும் கட்டமைப்புகளை இந்திய ராணுவத்தினர் தகர்த்தனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரானுக்கு எதிரான மோதலை முடிவுக்கு கொண்டு வர ஏதுவாக, அந்நாட்டுடனான சண்டை நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

------------

ஈரான் உடன் இரண்டாம் சுற்று அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க இஸ்லாமாபாத் செல்ல இருந்த அமெரிக்க துணை அதிபர் திரு. **J.D. Vance** தனது பயணத்தை ரத்து செய்தார்.

------------

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தில் நேரிட்ட வெடி விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை **13**ஆக அதிகரித்துள்ளது.

------------

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் **100** சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் ஆணையத்தின் லட்சினை மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

------------

சிங்கப்பூரில் இருந்து சென்னை வந்த விமானப் பயணிகள் மத்தியில் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து, விமானி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

------------

திருப்பூர் மகளிர் அரசு கலைக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாட்டுப் பணிகளை தேர்தல் பார்வையாளர்கள் நேற்று ஆய்வு செய்தனர்.

------------

திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரே மையத்தில் அதிக வாக்குச்சாவடிகள் அமைந்துள்ளதால், வாக்காளர்கள் எளிதில் தங்கள் மையத்தை அடையாளம் காண ஏதுவாக, முகப்பு பகுதியில் தனித்தனி வண்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன.

------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேர்தல் அதிகாரி திருமதி சினேகா தலைமையில் வாக்குச்சாவடி மையங்களுக்கு காவல்துறை பணியாளர்களை நியமிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 47 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

ஹைதராபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி நிர்ணயிக்கட்ட **20** ஓவரில் **2** விக்கெட் இழப்புக்கு **242** ரன் குவித்தது.

தொடக்க ஆட்டக்காரர் அபிஷேக் ஷர்மா **68** பந்துகளில் **135** ரன் சேர்த்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**243** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிங்கிய தில்லி அணி **20** ஓவரில் **9** விக்கெட்டுகளை இழந்து **195** ரன் எடுத்து தோல்வியடைந்தது.

**--------------**

இந்தியா - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

ஜோகன்னஸ்பர்கில் இப்போட்டி இந்திய நேரடிப்படி இரவு மணி **9.30**க்கு தொடங்கும்.

**5** போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் ஏற்கனவே முடிவடைந்த இரண்டு ஆட்டங்களிலும் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது.

**<<<<The End>>>>**